புதிதாக அமைக்கப்பட்ட மெட்ரோ ரெயில் பாதை

# வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே இறுதிக்கட்ட ஆய்வு

## பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவு

சென்னை, பிப். 11-

சென்னை வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரெயில் விரிவாக்கப் பாதையில் பாதுகாப்பு ஆணையர் மூன்று நாட்கள் ஆய்வு செய்து உள்ளார். விரைவில் இந்தப் பாதையில் பயணிகள் ரெயில் இயக்குவதற்கு சான்றிதழ் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இந்த பாதையில் தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று பார்வையிட்டு இறுதிக்கட்ட ஆய்வு செய்தார். சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ் பணிகளின் நிலைமை குறித்து அமைச்சருக்கு எடுத்துரைத்தார். பயணிகள் ரெயில் இந்தப் பாதையில் இயக்குவதற்காக பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். உடன் முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் மற்றும் மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் உடனிருந்தனர்.